


**21. 04. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுமாலை 6 மணியுடன் ஓய்கிறது.
- தமிழகம் முழுவதும் அரசியல் கட்சி தலைவர்கள் உச்சகட்ட வாக்கு சேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.
- தேசிய குடிமை பணி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 19 ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.
- ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் – டெல்லி கேப்பிட்டல்ஸை இன்று எதிாகொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**************

<u>பிரச்சாரம்</u>

தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை மறுநாள் நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுமாலை ஓய்வதால் தேர்தல் களம் இறுதிகட்ட பரபரப்புடன் காணப்படுகிறது.

தேர்தலை நோக்கி ஒட்டுமொத்த மாநிலமும் நகர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் இறுதி நாள் பிரச்சாரம் களைகட்டியுள்ளது.

அரசியல் தலைவர்கள் கடைசிகட்ட முயற்சியாக உச்சகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அனல் பறக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல், வேட்பாளர்களும், அரசியல் கட்சியை சேர்ந்த தொண்டர்களும் வீடு வீடாகவும், வீதி வீதியாகவும் சென்று தத்தம் கட்சிக்கு வாக்குகளை திரட்டி வருகின்றனர்.

தமிழகத்தில் நல்லாட்சி தொடர திமுகவிற்கு வாக்களிக்குமாறு அக்கட்சியின் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை சோளிங்கநல்லூர், கண்ணகிநகர், வேளச்சேரி சைதாப்பேட்டை பகுதிகளில் இன்று வாக்காளர்களிடையே அவர் வாக்கு திரட்டினார்.

சேலத்தில் வாக்கு சேகரித்த அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி திமுகவின் வாரிசு அரசியலை முடிவுக்கு கொண்டுவர தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சாலை பேரணியிலும் அவர் பங்கேற்றார்.

கோவையில் பிஜேபியின் திரு.அண்ணாமலையுடன் இணைந்து வாக்கு சேகரித்த அக்கட்சியின் மகளிர் அணி தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன், தேசிய ஜனநாயக கூட்டணி கோவையின் 10 தொகுதிகளிலும் வெற்றிபெறும் என்றார்.

கோவையின் வளர்ச்சியை தடுப்பதற்காகவே திமுக இங்கு வேட்பாளர்களை களமிறக்கியுள்ளதாக குற்றம் சாட்டினார்.

திருச்செந்தூர் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுகவின் திருமதி கனிமொழி தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட தமிழ்நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளை

திமுக எதிர்ப்பதாகவும், ஏராளமான நல திட்டங்களை திமுக செயல்படுத்தி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சென்னையில் தமிழகத்திற்கான பிஜேபி தேர்தல் பொறுப்பாளர் திரு.பியூஷ்கோயலுடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய தெலுங்கு தேச கட்சி தலைவர் திரு.சந்திரபாபு நாயுடு பிரதமர் திரு.நரேந்திரமோடியால் மட்டுமே தமிழகத்திற்கு தேவையான வளர்ச்சியை கொண்டுவர முடியும் என்றார்.

அவரது தலைமையால் தான் நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருப்பதாக குறிப்பிட்டார்.

சென்னை திருவான்மியூரில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவாக களமிறங்கிய காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே சமத்துவத்திற்காகவும் சமூக நீதி வளர்ச்சிக்காகவும் தமிழக மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய ஆம் ஆத்மி கட்சி தலைவர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் பிஜேபிக்கு வாக்களித்தால் கடந்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் முடக்கப்படும் என்றும் எனவே தமிழக மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணியை புறக்கணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

காரைக்குடியில் பிரச்சாரம் மேற்கொண்ட நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு.சீமான் வாக்குக்கு பணம் வாங்கும் நடவடிக்கை அரசியல் வாதிகளை முறைகேடுகளுக்கு தூண்டும் செயலாகும் என்று குறிப்பிட்டார்.

தேமுதிமுக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் விருதாச்சலம் உழவர் சந்தையில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

மாலை 6 மணியுடன் பிரச்சாரம் நிறைவடைவதால் பல்வேறு கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்களும் வாக்கு சேகரிப்பில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

**************

தேர்தல் ஆணையம்

தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள வெளி தொகுதிகளை சேர்ந்தோர் இன்றுமாலை 6 மணிக்குள் தொகுதிகளை விட்டு வெளியேற தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இன்று மாலை 6 மணிமுதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரை பிரச்சார பொதுக்கூட்டங்களை நடத்த கூடாது என்றும்,

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, வாட்ஸ் அப், முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பிரச்சாரம் செய்ய கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் நடைபெறும் பகுதிகளில் வாக்குப்பதிவு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முந்தைய 48 மணி நேரம் மதுவிலக்கு நாளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**************

தேர்தல் இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் வாக்குச்சாவடிக்கு வந்து செல்வதற்கான வசதிகளை பெற ஷக்சம் செயலியில் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சினேகா அறிவுறுத்தினார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டாச்சியர் அலுவலகத்தில் அத்தொகுதிக்குட்பட்ட வாக்காளர் சரிபார்க்கும் V V pad காகித தணிக்கை சோதனை மற்றும் வேட்பாளர்களின் சின்னங்கள் பொருத்தும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிக்கு பின்னர் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்லப்பட உள்ளது.

கடலூரில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட தேர்தல்

அலுவலர் திரு.சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

துண்டு பிரசுரங்களை விநியோகித்தும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**************

பறக்கும்படை

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் அருகே முப்பிலிவெட்டி கிராமத்தில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் 14 லட்ச ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் பாலூர் பகுதியில் மூன்று லட்சத்து ஆறாயிரம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

**************

மேற்குவங்கம்

மேற்குவங்கத்தில் 16 மாவட்டங்களில் உள்ள 152 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை மறுநாள் நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரமும் இன்றுமாலையுடன் ஓய்கிறது.

பிஜேபி மூத்த தலைவர் திரு.அமித்ஷா சிலிகுரியில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியதோடு, பேரணியிலும் பங்கேற்று பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வி மம்தா பானர்ஜியும் பல்வேறு பகுதிகளில் இன்று பொதுக்கூட்டங்கள் வாயிலாக பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதனிடையே வாக்குப்பதிவை ஒட்டி இணையதள கண்காணிப்பு சோதனை நடவடிக்கைகள் இன்று நடைபெறுகிறது.

தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவதை உறுதி செய்யும் வகையில் தேர்தல்

ஆணையம் காவல்துறையினருடன் இணைந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**************

கோவை மாவட்டத்திற்குட்பட்ட சட்டப்பேரவை தொகுதிகள் குறித்த

கண்ணோட்டம் இன்றைய தேர்தல் களத்தில்

இடம் பெறுகிறது.

**************

<u>நீங்கள்</u>

கேட்டுக் கொண்டிருப்பது

ஆகாஷ்வாணியின்

மாநில செய்தியறிக்கை

**************

<u>சி.பி.ராதாகிருஷ்ணன்</u>

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் அடித்தட்டு பிரிவினரிடம் கொண்டு செல்வதில் குடிமைபணி சேவை இன்றியமையா பங்காற்றுவதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் குடிமை பணி தின நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், மத்திய அரசின் திட்டங்களால் தொலைதூர கிராம மக்கள் பயனடையும்போது தான் அது வெற்றி அடைவதாக குறிப்பிட்டர்.

கட்டமைப்பு தொடங்கி சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் உலக அளவில் சிறப்பான இடத்தை நம் நாடு பெற்றுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

தேசிய குடிமை பணி தினத்தை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா

உள்ளிட்ட தலைவர்கள் குடிமை பணி அதிகாரிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**************

<u>நீலம் ஷமீராவ்</u>

மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 7 திட்டங்களால் ஜவுளித்துறை மேலும் வளர்ச்சிபெற்று ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்று இத்துறையின் செயலர் திருமதி நீலம் ஷமீராவ் கூறியுள்ளார்.

பெங்களுருவில் இன்று இதனை தெரிவித்த அவர், வேலை வாய்ப்பை அதிக அளவில் உருவாக்கும் இரண்டாவது துறையாக ஜவுளித்துறை திகழ்கிறது என்றார்.

இன்னும் நான்காண்டுகளில் ஜவுளித் தொழிற்சாலையை இரட்டிப்பாக்க மத்திய அரசு திட்டங்களை வகுத்திருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

**************

<u>மீனவர்கள்</u>

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 19 ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களை வரவேற்ற மீன்வளத்துறை அதிகாரிகள் அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனம் மூலம் சொந்த ஊர்களுக்கு அவர்களை அனுப்பிவைத்தனர்.

பாம்பன் பகுதியை சேர்ந்த இம்மீனவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி 2 விசை படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்க சென்ற போது இலங்கை கடலோர காவல் படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக குற்றம் சாட்டி அவர்களை கைது செய்ததோடு மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர்.

பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இவர்கள் மத்திய மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் விடுவிக்கப்பட்டு இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் தாயகம் திரும்ப உரிய ஏற்பாடுகளை மேற்கொண்ட தூதரக அதிகாரிகள் விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பிவைத்தனர்.

**************

<u>கோவில்</u>

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் சித்திரை திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

<u>கிரிக்கெட்</u>

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் – டெல்லி கேப்பிட்டல்ஸை எதிாகொள்கிறது.

**************